ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2238/20 - 2021 ජූලි මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.07.29

*2238/20 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

**சனாதிபதியின் பணிப்புரை**

இலங்கை அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி காலநிலை மாற்றங்களுக்கு நிலையான தீர்வுகளுடன்கூடிய பசுமை சமூகப் பொருளாதாரமொன்றாக இலங்கையை உருவாக்குவதற்காக சனாதிபதி செயலணியொன்றைத் தாபித்தல்.

1. மாண்புமிகு மஹிந்த அமரவீர, பா.உ., அவர்கள்
   சுற்றாடல் அமைச்சர்

2. மாண்புமிகு துமிந்த திசாநாயக்க, பா.உ., அவர்கள்
   சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

3. மாண்புமிகு அருந்திக பெர்ணாந்து, பா.உ., அவர்கள்
   தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

1A - G 34727 — 410 (2021/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. மாண்புமிகு கனக ஹேரத், பா.உ., அவர்கள்
கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கைகள் மற்றும் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை, இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்.

5. மாண்புமிகு ஜானக வக்கும்புர, பா.உ., அவர்கள்
கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

6. மாண்புமிகு மொஹான் த சில்வா, பா.உ., அவர்கள்
கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

7. மாண்புமிகு விமலவீர திசாநாயக்க, பா.உ., அவர்கள்
வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காடுகள் மீள்நடுகை மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

8. மாண்புமிகு சதாசிவம் வியாழேந்திரன், பா.உ., அவர்கள்
பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

9. மாண்புமிகு ஷஷீந்திர ராஜபக்ஷ, பா.உ., அவர்கள்
சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

10. மாண்புமிகு (திருமதி) சீதா அரம்பேபொல, பா.உ., அவர்கள்
திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சர்

11. கலாநிதி எம்.டப்ளிவ்.என்.தர்மவர்த்தன அவர்கள்
தலைவர், தேயிலை ஆராய்ச்சி நிறுவகம்

12. வைத்தியர் சாரங்க அழகப்பெரும அவர்கள்
தலைவர், தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்

13. பேராசிரியர் (திருமதி) சுதீரா ரன்வல அவர்கள்
தலைவர், இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம்

14. திரு. சுரேஷ் தயாநாத் டி மெல்
தலைவர், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

15. கலாநிதி டி.எம்.ஜே.பீ.சேனாநாயக்க அவர்கள்
பணிப்பாளர், நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்

16. பேராசிரியர் பி.ஐ.யாப்பா அவர்கள்
சப்பிரகமுவ பல்கலைக்கழகம்

17. கலாநிதி ஜி. ஏ. எஸ். பிரேமகுமார அவர்கள்
தலைவர், கைத்தொழில், தொழில்நுட்ப நிறுவனம்

18. திரு.மஞ்சு குணவர்த்தன அவர்கள்
பணிப்பாளர் சபை உறுப்பினர்
இலங்கை இன்ஸ்ரிடியூட் ஒவ் நெநோ ரெக்னொலோஜி பிறைவேட் லிமிட்டெட்

19. வைத்தியர் அனுருத்த பாதெனிய அவர்கள்
விசேட மருத்துவ நிபுணர்

20. கலாநிதி பீ.கே.ஜே. காவன்திஸ்ஸ அவர்கள்
பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்
"சியபத்த" சர்வதேச கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (தனியார்) கம்பெனி

21. ஆயுர்வேத வைத்தியர் பிலான விதானகே சுஜீவ பிரசன்ன குமார விதானகே அவர்கள்
செத்சுவ ஆயுர்வேத வைத்தியசாலை (தனியார்) கம்பெனி

22. திரு. தம்மிக கொப்பேகடுவ
முகாமையாளர் (மனிதவளம்), லலான் றபர் அக்றி டிவிஷன்

23. திரு. ஜீவக அத்தபத்து
தலைவர், ஸ்ரான்டட் ரீ அன்ட் லான்ட் லிமிட்டெட்

24. திரு. திலித் ஜயவீர
தலைவர், தெரண ஊடக வலையமைப்பு

25. திரு.சமுதித குமாரசிங்க
முகாமைத்துவப் பணிப்பாளர், லங்கா பயோ பர்டிலைசர் பிறைவேட் லிமிட்டெட்

வாழ்த்துக்கள்!

காலநிலை மாற்றங்களுக்கு நிலையான தீர்வுகளுடன்கூடிய பசுமை சமூகப் பொருளாதார வடிவத்தை நோக்கிச் செல்வதற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களால் 2021.04.27 ஆந் திகதியிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கொள்கைச் சட்டகம் மற்றும் முன்மொழிவுகளுக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பட்டுள்ளதாதலாலும்;

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரடகனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளவாறு பசளைப் பயன்பாடு, நிலம், உயிரினப் பல்வகைத்தன்மை, வளிமண்டலம், கழிவுப்பொருட்கள், கைத்தொழில்கள், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி, குடியிருப்பு, நகர மற்றும் சுற்றாடல் கல்வி தொடர்பான விடயங்களைக் கவனத்தில்கொண்டு அச்சவால்களுக்கு முகம்கொடுப்பதற்குத் தெளிவான மக்கள்வரமொன்று வழங்கப்பட்டுள்ளதாதலாலும்;

தற்போது இரசாயனப் பசளை, களை நாசினி மற்றும் கிருமி நாசினிகளுக்காகப் பெருந்தொகையான செலவொன்றை ஈடுசெய்வதற்கு மேலதிகமாக, அதன்மூலம் மண் மற்றும் நீர் மாசடைவதற்கு இணையாகப் பண்புசார் உற்பத்திகள் கிடைக்கப்பெறாமை, அவற்றின் அதிகளவு பாவனையின் காரணமாக ஆறுகள், குளங்கள் என்பவற்றின் நீர் மாசடைதல் மற்றும் மக்களுக்கு ஏற்படும் நோய்கள் காரணமாக அவர்களின் சுகாதாரநிலை மற்றும் வாழ்வாதார வழிகள் இழக்க நேரிடுதல்போன்று நச்சுத்தன்மையற்ற உணவுகளைப் பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்கள் அதிகரித்தல் போன்ற விடயங்களைக் கருத்தில்கொண்டும்,

இரசாயனப் பசளைகள், எரிபொருட்கள், பிளாஸ்டிக், இரசாயனப் பொருட்கள் இறக்குமதிக்காக நாட்டுக்கு வெளியே செல்லும் அந்நியச் செலாவணியை நாட்டினுள் மிகுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் சேதன மற்றும் இயற்கை பசளைப் பாவனைமூலம் இலங்கையின் உயிரினப் பல்வகைத்தன்மையை மற்றும் சூழல்நேயமிக்க சுகாதாரத்துடனான வாழ்வாதார வழிமுறைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றினூடாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகள் தொடர்பாகவும் காலநிலை மாற்றங்களைத் தணித்துக்கொள்வதனூடாக மற்றும் பசுமைப் பொருளாதாரமொன்றின் மூலமாக நிலையான அபிவிருத்தியை அடைந்து கொள்ளக்கூடிய இயலுமை அதிகரித்துள்ளதாதலாலும்,

மேலோங்கிவரும் உலகளாவிய பொருளாதாரப் போக்கினுள் உலகப் பொருளாதாரத்தின் உயர்ந்த நன்மைகளை நாடு அடைவதற்கு சூழல்நேயமிக்க சமூகப் பொருளாதார வடிவமைப்புக்கு மக்களைத் தயார்படுத்துவதற்காக இலங்கை நிலையான தீர்வுகளுடன்கூடிய பசுமை சமூகப் பொருளாதார வடிவமைப்புக்கு அணுகும் முன்னுரிமையினுள் செயற்பட வேண்டியுள்ளதாதலாலும்,

1. மாண்புமிகு மஹிந்த அமரவீர, பா.உ., அவர்கள்
சுற்றாடல் அமைச்சர்

2. மாண்புமிகு துமிந்த திசாநாயக்க, பா.உ., அவர்கள்
சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

3. மாண்புமிகு அருந்திக பெர்ணாந்து, பா.உ., அவர்கள்
தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அதுசார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர்

4. மாண்புமிகு கனக ஹேரத், பா.உ., அவர்கள்
கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச்செய்கைகள் மற்றும் தொழில்சாலைகளை நவீனமயப்படுத்துதல் மற்றும் தேயிலை, இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்.

5. மாண்புமிகு ஜானக வக்கும்புர, பா.உ., அவர்கள்
கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

6. மாண்புமிகு மொஹான் த சில்வா, பா.உ., அவர்கள்
கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

7. மாண்புமிகு விமலவீர திசாநாயக்க, பா.உ., அவர்கள்
வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் காடுகள் மீள்நடுகை மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

8. மாண்புமிகு சதாசிவம் வியாழேந்திரன், பா.உ., அவர்கள்
பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

9. மாண்புமிகு ஷஷீந்திர ராஜபக்ஷ, பா.உ., அவர்கள்
சேதன பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குறுத்துகை மற்றும் நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

10. மாண்புமிகு (திருமதி) சீதா அரம்பேபொல, பா.உ., அவர்கள்
திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் இராஜாங்க அமைச்சர்

11. கலாநிதி எம்.டப்ளிவ்.என்.தர்மவர்த்தன அவர்கள்
தலைவர், தேயிலை ஆராய்ச்சி நிறுவகம்

12. வைத்தியர் சாரங்க அழகப்பெரும அவர்கள்
தலைவர், தெங்கு ஆராய்ச்சி நிறுவகம்

13. பேராசிரியர் (திருமதி) சுதீரா ரன்வல அவர்கள்
தலைவர், இறப்பர் ஆராய்ச்சி நிறுவகம்

14. திரு. சுரேஷ் தயாநாத் டி மெல் அவர்கள்
தலைவர், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

15. கலாநிதி டி.எம்.ஜே.பீ.சேனாநாயக்க அவர்கள்
பணிப்பாளர், நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்

16. பேராசிரியர் பி.ஐ.யாப்பா அவர்கள்
சப்பிரகமுவ பல்கலைக்கழகம்

17. கலாநிதி ஜி. ஏ. எஸ். பிரேமகுமார அவர்கள்
தலைவர், கைத்தொழில், தொழில்நுட்ப நிறுவனம்

18. திரு. மஞ்சு குணவர்த்தன
பணிப்பாளர் சபை உறுப்பினர்
இலங்கை இன்ஸ்ரிடியூட் ஒவ் நெநோ ரெக்னொலோஜி பிறைவேட் லிமிட்டெட்

19. வைத்தியர் அனுருத்த பாதெனிய அவர்கள்
விசேட மருத்துவ நிபுணர்

20. கலாநிதி பீ.கே.ஜே. காவன்திஸ்ஸ அவர்கள்
பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்
"சியபத்த" சர்வதேச கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் (தனியார்) கம்பெனி

21. ஆயுர்வேத வைத்தியர் பிலான விதானகே சுஜீவ பிரசன்ன குமார விதானகே அவர்கள்
செத்சுவ ஆயுர்வேத வைத்தியசாலை (தனியார்) கம்பெனி

22. திரு. தம்மிக கொப்பேகடுவ
முகாமையாளர் (மனிதவளம்), லலான் றபர் அக்றி டிவிஷன்

23. திரு. ஜீவக அத்தபத்து
தலைவர், ஸ்ரான்டட் ரீ அன்ட் லான்ட் லிமிட்டெட்

24. திரு. திலித் ஜயவீர
தலைவர், தெரண ஊடக வலையமைப்பு

25. திரு.சமுதித குமாரசிங்க
முகாமைத்துவப் பணிப்பாளர், லங்கா பயோ பர்டிலைசர் பிறைவேட் லிமிட்டெட்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி பதவியை வகிக்கும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின்மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும்கொண்டு, மேற்சொல்லப்பட்ட உங்களை காலநிலை மாற்றங்களுக்கு நிலையான தீர்வுகளுடன்கூடிய பசுமை சமூகப் பொருளாதாரமொன்றை இலங்கையை உருவாக்குவதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக கீழக்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செயற்படுத்துவதற்காக இத்தால் நியமிக்கின்றேன்.

இச்செயலணியானது "காலநிலை மாற்றங்களுக்காக நிலையான தீர்வுகளுடன்கூடிய பசுமையான இலங்கையை உருவாக்கும் சனாதிபதி செயலணி" எனப் பெயரிடப்படுகிறது.

1. கமத்தொழிலுக்காக இரசாயனப் பசளைகள், கிருமிநாசினி மற்றும் களை நாசினிகளுக்குப் பதிலாகச் சேதனப் பசளை மற்றும் உற்பத்திகளைப் பாவித்து முழுமையாக இரசாயன விவசாயத்திலிருந்து இயற்கை விவசாயத்துக்கு மாறுவதற்காக வழிகாட்டல் வரைபடமொன்றைத் (Road Map) தயாரித்து ஒட்டுமொத்தமாகக் கடந்த ஆண்டை அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு ஆண்டிலும் தொடர்ந்து இடம்பெறும் (Front loaded actions programme) இரசாயனப் பசளைப் பாவனையிலிருந்து துரிதமாக வெளியேறுவது மற்றும் சிறந்த பசளைக் கலவைகளையிட்டு மண், நீர் மற்றும் பயிர்களைப் போசிப்பதனூடாக அறுவடைகளை அதிகரிப்பதற்கும் உணவுகளை உற்பத்தி செய்யும் பண்ணைகளுக்காகச் சேதன மற்றும் இயற்கைப் பசளைகளை வழங்குவதற்கு பிரதேச மட்டத்தில் மாடுகள், ஆடுகள், கோழிகள் போன்ற கால்நடைக் கழிவுகளை மற்றும் வீட்டுக் கழிவுப் பொருட்களைப் பாவித்து அவ்வாறான பசளைகளைத் தயாரித்தல் மற்றும் பசளை வழங்குநர்களை ஊக்குவிக்கும் முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்டு வர்த்தகத்துறையில் ஈடுபாடுகொள்ளச் செய்வதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்தலும் அவற்றை வழிநடத்தலும்.

2. சிறிய மற்றும் நடுத்தரவளவிலான ஒழுங்கமைக்கப்பட்ட வர்த்தகத்துறையை உயர்மட்டத்திலும் சிறந்த தரத்திலுமான சேதனப் பசளையை உற்பத்தி செய்தலும் அவ்வாறு உயர் தரத்தில் சேதனப் பசளைகளை உற்பத்தி செய்யும் நாடுகளை இனங்கண்டு அவற்றை இறக்குமதி செய்தலும் தேசிய ரீதியில் பசளையின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய துரித நடவடிக்கைகளை எடுத்தல்.

3. சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப அறிவினை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக விவசாயத் திணைக்களம், கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம், சிறிய தேயிலை தோட்ட அபிவிருத்திச் சபை, விவசாய ஏற்றுமதித் திணைக்களம், தெங்கு அபிவிருத்திச் சபை, தெங்குச் செய்கை சபை, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பிரதேச செயலக அலுவலகங்களில் உள்ள சகல அபிவிருத்தி உத்தியோகத்தர், கருத்திட்ட சேவை உத்தியோகத்தர்கள், ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் ஆகியோரைப் பயன்படுத்தி பரம்பல் மற்றும் மேற்பார்வை சேவைகளை முன்னெடுக்கக் கூடிய வகையில் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த விவசாயத்துறை விஞ்ஞானிகள், விவசாயப் பீடங்களின் விரிவுரையாளர்கள், தொழில்நிபுணர்கள், காணி உரிமை பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்கள் உட்பட அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய மக்களை கேந்திரமாகக் (inclusive people centric) கொண்ட வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்தல்.

4. தற்போது செய்கை மேற்கொள்ளப்படாத கைவிடப்பட்ட நெற்காணிகளில் பயன்படுத்தக் கூடிய நெற்காணிகளை அபிவிருத்தி செய்து சேதனப் பசளைகள் மற்றும் இயற்கை பசளைகளைப் பயன்படுத்தி மரக்கறி, பழ வகைகள், பாரம்பரிய நெல், பூக்கள், கீரைகள் என்பவற்றை பயிரிடுவதற்காக கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் குறிப்பிட்ட பிரதேசங்களில் விவசாயிகளை ஈடுபடுத்தல்.

5. பெருந்தோட்டக் கம்பனிகளுக்குரிய செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளில் தேயிலை, தெங்கு, இறப்பர், கறுவா, மிளகு, பலாக்காய் போன்ற செய்கைகளுக்காக அது சம்பந்தமாக ஊக்கம் காட்டும் இளம் தொழில்முயற்சியாளர்களைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத காணிகளில் செய்கைகளை மேற்கொள்ளல்.

6. சேதனப் பசளைகளை விநியோகிப்பதற்காக அரச உரக்கம்பனிகள் மற்றும் தனியார் உரக்கம்பனிகளின் நாடு முழுவதிலும் பரவியுள்ள வர்த்தக வலைப்பின்னலை பயன்படுத்திக் கொள்ளல்.

7. நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தி மற்றும் உணவு விநியோகத்தை அதிகரித்தலும் பிரதேச மட்டத்தில் அந்தப் பயிர்ச்செய்கைகள் இடம்பெறும் பிரதேசங்கள் மற்றும் விவசாயிகளை இனங் காணுதலும் அவற்றின் மூலமான விளைச்சலை அதிகரித் தலும் அந்த உணவுப் பொருட்களை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பகிர்ந்தளிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்தல்.

8. சூழல் மற்றும் வளிமண்டலம் மாசு அடைதலை (environment & air pollution) குறைக்கும் வகையில் எரிபொருள் (fossil fuel) பாவனைக்குப் பதிலாக சூரிய ஒளி, காற்று போன்றவற்றினால் மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை (renewable energy) உருவாக்கும் கருத்திட்டங்கள் மற்றும் மின்சார மோட்டார் வாகனங்கள் (electric vehicles) என்பவற்றை பயன்படுத்துவதை இடையூறு இல்லாமல் முன்னெடுக்கக் கூடிய செயற்பாடுகளை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்தல்.

9. தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் (plastic) பாவனையை தொடர்ந்தும் குறைத்தலும் இரசாயன இறக்குமதியை கட்டுப் படுத்துவதற்கான யோசனைகளையும் வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தல்

10. மண் பாதுகாப்பு, நீரேந்தும் பிரதேசங்களின் பாதுகாப்பு என்பவற்றிற்காக தற்போது தடைசெய்யப்பட்டுள்ள முள்ளுத்தேங்காய் தொடர்ந்தும் இடம் பெறுவதை தடுத்தலும் முள்ளுத் தேங்காய் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோர்களை அதிலிருந்து அகற்றுவதற்கும் என்னால் 2021, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதிய 2222/13 ஆம் இலக்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட கட்டளைகளை நடைமுறைப்படுத்தலை உடனடியாக ஆரம்பித்தல்.

11. இலங்கை விமானப் படையினரால் அவதானிக்கப்பட்டுள்ள வனப்பாதுகாப்புப் பிரதேசங்களில் தற்போது இனங்காணப்பட்டுள்ள காடுகள் அழிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் விரைவாக மீள மரநடுகைக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

12. யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் யானைக் கடவைகளில் அத்துமீறி குடியேறியுள்ளவர்களை வெளியேற்றி அவர்களை தகுந்த இடங்களில் குடியமர்த்தி, யானைகள் கடந்து செல்வதற்கான இடங்களை(elephant corridors) உரியவாறு சீர்செய்தலும், யானை வேலிகளை அமைக்கும் பணிகளை துரிதப்படுத்துதலுக்கான வழிவகைகளைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்

13. நகர்ப்புற வீடுகள் மற்றும் கட்டிடங்களைச் சூழல்நேயமிக்கதாக அமைப்பதற்கு உரிய துறைகள் மற்றும் நபர்களை ஊக்குவிப்பதற்குப் பொருத்தமான முன்மொழிவுகளை முன்வைத்தல்.

14. பசுமை சுற்றாடலை பாதுகாப்பதற்காக குப்பைக் கூழங்களை முறையாக அகற்றப்படுவதற்கும் மீள் சுழற்சியின் மூலம் வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்களை சேதனப் பசளைகளுக்கான மூலப் பொருட்களாக மாற்றும் நடவடிக்கைகளுக்காக அனைத்து தொழிற்றுறைகளையும் ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்தல்

15. பல்லினத் தன்மை மற்றும் சூழலை பாதுகாத்தல் மற்றும் நிலைபேறு அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட வெளிவாரி செயற்பாடுகள் ஊடாக சிறுவர்கள் மத்தியில் சூழல் தொடர்பான அறிவினை மற்றும் சிந்தனைகளை மேம்படுத்துவதற்காக பாடசாலை மற்றும் உயர்கல்விக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான யோசனைகளை முன்வைத்தல்.

16. சூழல் பாதுகாப்பின் மூலம் காலநிலை மாற்றங்களுக்கு நிலையான தீர்வொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக மக்கள் மத்தியில் சிந்தனை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்தி பசுமை பொருளாதாரத்தை (green economy) நோக்கி பயணிப்பதற்கான புத்திஜீவிகளின் கலந்துரையாடல்களை தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக நிகழ்ச்சித்திட்டங்களூடாக முன்னெடுத்தலும் அதற்காக ஊடகத்துறையை ஒருங்கிணைத்தல்.

17. தேசிய உரச் செயலகத்தை தேசிய சேதன மற்றும் இயற்கை உரச் செயலகமாக மறுசீரமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளைச் செயற்படுத்துதலும் இயற்கை மற்றும் சேதனப்பசளை வர்த்தகர்கள் மற்றும் அது சம்பந்தமான விடய அறிவுள்ள அரச உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி தாபன ரீதியிலான புதிய தலைமைத்துவத்தை ஏற்படுத்தல்.

18. இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியும் இணைந்து சேதன மற்றும் இயற்கைப் பசளை உற்பத்தி மற்றும் விநியோகம் என்பவற்றை மறுசீரமைப்பதற்காக இறக்குமதியை நிறுத்துதல்.

19. இரசாயன உர பயன்பாட்டுக்கு பதிலாக சேதன மற்றும் இயற்கை உரத்தை பயன்படுத்துவதற்கான முறைமைகளை மற்றும் இடைக்கால சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்கான சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகளை வெளியிடுதல்.

20. தற்போது நாட்டிலுள்ள இரசாயன பசளைகள் அனைத்தையும் இறக்குமதி செய்வோரிடமிருந்தும் உள்ளூர் தொகை வழங்குநர்களிடமிருந்தும் பெற்றுக்கொண்டு அப்பசளைகளுக்காக உச்ச விலையைத் தீர்மானித்து அவை பயன்படுத்தப்பட வேண்டிய அளவினைக் குறிப்பிடும் பிரமாணங்களை வர்த்தமானியில் பிரசுரித்து அந்தக் கட்டளைகளை மீறும் வர்த்தக நிறுவனங்களைத் தடைசெய்தல்.

21. குறுகிய காலத்திற்குத் தேவையான இடைக்காலத்திற்குரிய இரசாயன உரத் தேவைகளை விஞ்ஞானரீதியாகக் கணிப்பீடுசெய்து அதைப் பயன்படுத்தக்கூடிய அளவுகள், பயிர்கள் மற்றும் பகிர்ந்தளிக்கும் திறமுறையை இனமறிந்து அவற்றை முகாமைசெய்தல்.

22. மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், மற்றும் சமூர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் உள்ளிட்ட தொடர்புடைய நிறுவனங்களைக் கூட்டிணைத்து கிராமிய மற்றும் பிரதேச ரீதியில் பசுமை உற்பத்திகள் மற்றும் பசுமை சமூகத்தை உருவாக்குவதற்குரிய வழிகளை வகுத்தல்.

23. 2021.04.27 ஆந் திகதி அமைச்சரவை அனுமதித்த கொள்கைகள் மற்றும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அரச மற்றும் தனியார்துறையினரை சிறந்த முறையில் ஒருங்கிணைத்தலும் அதன்போது எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதலும்.

24. காலநிலை மாற்றங்கள், பசுமை சமுதாயம், மற்றும் பொருளாதார நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிக்கும் சர்வதேச நிதி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள், ஐக்கியநாடுகள் சபை நிறுவனங்கள், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சூழல் அபிவிருத்தி நிதியம் மற்றும் நிதி நிறுவனங்கள் மற்றும் அவற்றின் உள்நாட்டு அலுவலகங்கள், தூதரக சேவைகள் போன்று, இலங்கைக்கான வெளிநாட்டு இராஜதந்திர தூதரக சேவைகள் என்பவற்றை இலங்கை முன்னெடுத்துள்ள இந்த நடவடிக்கைகளில் பங்காளர்களாக இணைத்துக் கொள்ளல்.

25. சர்வதேச நிதிநிறுவனங்கள் மற்றும் சந்தைகள் மூலம் புதிய நிதியாக்க செயற்பாடுகளை உள்வாங்கி பசுமை பிணை முறிகளை (green bonds and financial instruments) உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் பிரபல்யப்படுத்துவதற்கான பொறுப்பினை இலங்கை மத்திய வங்கியின் கவனத்திற்கு விரைவாக ஒப்படைத்தல்.

மேலும், **சுற்றாடல் அமைச்சர், மாண்புமிகு மஹிந்த அமரவீர அவர்களை** மேற்போந்த செயலணியின் தலைவராக நியமிக்கின்றேன்.

சுற்றாடல் அமைச்சின் செயலாளர், **வைத்தியர் அனில் ஜாசிங்க அவர்களை** மேற்போந்த செயலணியின் செயலாளராக நியமிக்கின்றேன்.

மேலும், பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமையை ஒழித்துக்கட்டுவதற்கான செயலணி மற்றும் கிராமத்துடனான கலந்துரையாடல் கிராமிய அபிவிருத்தி சனாதிபதி செயலணியுடன் கூட்டிணைந்து செயற்பட வேண்டுமென மேற்போந்த செயலணிக்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

மேலும், இத்தால் ஒப்படைக்கப்படும் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையானவாறு விடயங்களைத் தேடிப்பார்ப்பதற்கும் ஆலோசனைகளை வழங்குவதற்கும் மேற்போந்த சனாதிபதி செயலணிக்கு இத்தால் அதிகாரமளிக்கிறேன்.

மேலும், சொல்லப்பட்ட செயலணியின் உறுப்பினர்களாகிய நீங்கள் ஆகக்குறைந்தது மாதத்துக்கொருமுறை எனக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்குமாறு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

மேலும், இச்செயலணியினால் ஆலோசனை வழங்கக்கூடிய அல்லது சேவைகளை வழங்குவதற்காக உதவியினைக் கோரக்கூடிய சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் ஏனைய நபர்களும் குறித்த செயல்பாடு தொடர்பில் உரியவாறு அவற்றைப் பின்பற்றி அத்தகைய ஆலோசனைகளுக்கமையச் செயற்பட வேண்டுமெனவும் வழங்கக்கூடிய சகல உதவிகளையும் வழங்க வேண்டுமென்றும் வழங்கக்கூடிய அத்தகைய சகல தகவல்களை வழங்க வேண்டுமென்றும் நான் இத்தால் சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், யாதேனும் அரச ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரச திணைக்களமொன்றின், அரச கூட்டுத்தாபன மொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் மேற்குறிப்பிட்ட செயலணியினால் ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்ற தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் என்னிடம் அறிக்கையிடுமாறு மேற்குறிப்பிட்ட செயலணிக்கு நான் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதிய மற்றும் இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதிய காலநிலை மாற்றங்களுக்கு நிலையான தீர்வுகளுடன்கூடிய பசுமை சமூகப் பொருளாதாரமொன்றாக இலங்கையை உருவாக்குவதற்காக சனாதிபதி செயலணியொன்றைத் தாபித்தல் தொடர்பான சனாதிபதியின் பணிப்புரைகளை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபத்தோராம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் கொழும்பில் அளிக்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

08-112

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.